**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2021-22 ஆம் கல்வியாண்டில் அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள், ICT (Smart Classroom, Hi-Tech Lab) மற்றும் NSQF தொழிற்கல்வி ஆய்வக உபகரணங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் வாயிலாக கொள்முதல் செய்ய உரிய அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (அகஇ1) துறை**

**அரசாணை (நிலை) எண்.142** — **நாள் 11.10.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ வருடம், புரட்டாசி 25**

**படிக்கப்பட்டது :**

மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் கடித ந.க.எண்.417/C6/SS/S&PE/2021, நாள் 26.08.2021.

---------

**ஆணை :-**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் வாயிலாக, 2021-2022-ம் கல்வியாண்டில் செயல்படுத்தப்பட வேண்டிய மாநிலத் திட்ட மதிப்பீட்டு அறிக்கையில் (Appraisal Report of AWP&B) உள்ளபடி திட்ட ஒப்புதல் குழுவிற்கு (Project Approval Board) பரிந்துரை செய்யப்பட்டு கீழ்க்காணுமாறு ஒப்புதல் அளிக்கப்பெற்ற அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் ICT சார்ந்து அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கான உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech Lab), உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கான திறன்மிகு வகுப்பறைகளுக்குத் (Smart Classroom) தேவையான உபகரணங்கள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான NSQF தொழிற்கல்வி ஆய்வக உபகரணங்களை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வாயிலாக கொள்முதல் செய்வதற்கும், அதனை நேரிடையாக பள்ளிகளுக்கு வழங்கிடவும் உரிய

அனுமதி வழங்குமாறு மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

1. <u>விளையாட்டு உபகரணங்கள்</u>

| பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | பள்ளி ஒன்றுக்கு (இலட்சத்தில்) | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **தொடக்க நிலை** | | | |
| தொடக்கநிலைப் பள்ளிகள் | 24266 | 0.05 | 1213.30 |
| நடுநிலைப் பள்ளிகள் | 6948 | 0.10 | 694.80 |
| | 31214 | | 1908.10 |
| **இடைநிலை** | | | |
| உயர்நிலைப் பள்ளிகள் | 3120 | 0.25 | 780.00 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 3057 | 0.25 | 764.25 |
| | 6177 | | 1544.25 |
| மொத்தம் | | | 3452.35 |

2. <u>நூலகப் புத்தகங்கள்</u>

| பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | பள்ளி ஒன்றுக்கு (இலட்சத்தில்) | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **தொடக்க நிலை** | | | |
| தொடக்கநிலைப் பள்ளிகள் | 24266 | 0.05 | 1213.30 |
| நடுநிலைப் பள்ளிகள் | 6948 | 0.13 | 903.24 |
| | 31214 | | 2116.54 |
| **இடைநிலை** | | | |
| உயர்நிலைப் பள்ளிகள் | 3120 | 0.15 | 468.00 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 3057 | 0.20 | 611.40 |
| | 6177 | | 1079.40 |
| மொத்தம் | | | 3195.94 |

3. ICT உபகரணங்கள்

| பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | பள்ளி ஒன்றுக்கு (இலட்சத்தில்) | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **தொடக்க நிலை** | | | |
| உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் – நடுநிலைப் பள்ளிகளுக்கு | 1784 | 6.40 | 11417.60 |
| **இடைநிலை** | | | |
| திறன்மிகு வகுப்பறைகள் – உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு (ஒரு பள்ளிக்கு 2 வகுப்பறைகள் வீதம்) | 865 | 2.40 | 2076.00 |
| **மொத்தம்** | | | 13493.60 |

4. NSQF தொழிற்கல்வி ஆய்வக உபகரணங்கள்

| பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | பள்ளி ஒன்றுக்கு (இலட்சத்தில்) | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **இடைநிலை** | | | |
| மேல்நிலைப் பள்ளிகள் | 42 | 5.00 | 210.00 |
| **மொத்தம்** | | | 210.00 |

3. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, 2021-2022-ஆம் கல்வியாண்டிற்கான மாநிலத் திட்ட மதிப்பீட்டு அறிக்கையில் (Appraisal Report of AWP&B) உள்ளபடி பின்வருமாறு திட்ட ஒப்புதல் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் ICT சார்ந்து அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கான உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech Lab), உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கான திறன்மிகு வகுப்பறைகளுக்குத் (Smart Classroom) தேவையான உபகரணங்கள் மற்றும் மேல்நிலைப்

பள்ளிகளுக்கான NSQF தொழிற்கல்வி ஆய்வக உபகரணங்கள் ஆகியவற்றை தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வாயிலாக கொள்முதல் செய்வதற்கும், அதனை நேரிடையாக பள்ளிகளுக்கு வழங்கிடவும் உரிய அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

| பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | விளையாட்டு உபகரணங்கள் | நூலகப் புத்தகங்கள் | ICT (திறன் வகுப்பறைகள், உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் | NSQF தொழிற்கல்வி ஆய்வக உபகரணங்கள் |
| தொடக்க நிலை | | | | |
| தொடக்கநிலைப் பள்ளிகள் | 24266 | 24266 | - | - |
| நடுநிலைப் பள்ளிகள் | 6948 | 6948 | 1784 | - |
| இடைநிலை | | | | - |
| உயர்நிலைப் பள்ளிகள் | 3120 | 3120 | 865 | - |
| மேல்நிலைப் பள்ளிகள் | 3057 | 3057 | | 42 |

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-6.
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை-6.

நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை -9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
பள்ளிக்கல்வித் துறை, சென்னை-9.
நிதி (கல்வி-II) துறை, சென்னை -9.
பள்ளிக் கல்வி (வரவு-செலவு)த் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்